# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 239/மா/2022**

**நாள்: 29.12.2022**

திரு. R. காதர்,
வேலூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி,
வேலூர் – எதிர்மனுதாரர்

வேலூர் மாவட்டம், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, இக்ரா பள்ளி அருகில், கதவு எண்.18/A–ல் வசிக்கும் திரு. R. காதர் என்பவரின் 25.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2022–ல் பெறப்பட்டு 239/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர் மாவட்டம், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, இக்ரா பள்ளி அருகில், கதவு எண்.18/A–ல் வசிக்கும் திரு. R. காதர் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 25.11.2022 நாளிட்ட தனது மனுவில் :

" வேலூர் மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் முகவரி பலகை வைக்கப்பட்ட போர்டுகளில் நடைபெற்ற ஊழல் முறைகேடு செய்த அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுத்து, ஊழலில் சம்பாதித்த சொத்துக்களை அரசு கைப்பற்றவும், அபராத தொகையுடன் மீண்டும் அனைத்து இடங்களிலும் தரமான முகவரி பலகை ஸ்டிக்கர் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வேலூர் மாநகராட்சி செயற்பொறியாளர் திரு.கண்ணன் அவர்களிடம் அனைத்து இடங்களிலும் தரமான முகவரி பலகை ஸ்டிக்கர் அமைக்க நடவடிக்கை மனு கொடுத்தும் கண்டும் காணாமல் உள்ளார். தகவல் உரிமை சட்டத்தில் முகவரி பலகை ஸ்டிக்கர் அமைக்க செலவு தொகை ரூ. 5,20,63,185/–க்கு விவரம் கேட்கப்பட்டது. நடவடிக்கை மனு கொடுத்தும் கண்டும் காணாமல் உள்ளார்.

தினந்தந்தி நாளிதழில் 07.05.2022 அன்று முகவரி பலகை வைக்கப்பட்ட போர்டுகளின் நிலை பற்றி செய்தி வந்தும் இன்று வரை நடவடிக்கை இல்லை. வேலூர் மாநகராட்சி ஆணையர் திரு. அசோக்குமார் அவர்கள் நடவடிக்கை மனு கொடுத்தும் கண்டும் காணாமல் உள்ளார். தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் அலுவலகத்தில் மனு செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. வேலூர் மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் முகவரி பலகை வைக்கப்பட்ட போர்டுகளில் ஒரு சில மாதத்தில் உடைந்தும் முகவரி விவரம் உள்ள ஸ்டிக்கர் தானாக கழன்றும் நீங்கி விட்டது. பொது தகவல்

அலுவலர் தகவல் உரிமை சட்டத்தில் அனைத்து இடங்களிலும் முகவரி பலகை ஸ்டிக்கர் மீண்டும் சரி செய்யப்பட்டது என பொய்யான தகவல் கொடுத்து ஏமாற்றி உள்ளார்.

அனைத்து வார்டுகளிலும் ஒரு சில தெருவைத் தவிர முகவரி பலகை வைக்கப்பட்ட போர்டுகள் ஒரு சில மாதத்தில் உடைந்தும் முகவரி விவரம் ஸ்டிக்கர் தானாக கழன்றும் நீங்கி விட்டது. இதனால் தெரு முகவரி இல்லாததால் பொதுமக்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர். ஆகவே இதில் நடைபெற்ற ஊழலை பதிவு செய்து ஊழலுக்கு உதவி செய்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். மக்களின் வரி பணத்தை சம்பளமாக பெற்றுக்கொண்டு கடமை தவறிய அனைத்து அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் ஊழல் லஞ்சத்தை ஒழித்து நம் நாட்டை காப்பாற்றுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஊழல் செய்த வேலூர் மாநகராட்சி அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஊழலில் சம்பாதித்த சொத்துக்களை அரசு கைப்பற்றவும் மற்றும் அபராத தொகையுடன் மீண்டும் அனைத்து இடங்களிலும் தரமான முகவரி பலகை ஸ்டிக்கர் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 06.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. மனுதாரர் 20.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

" வேலூர் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் அமைக்கப்பட்டுள்ள முகவரி பலகை தரமற்றதாகவும், பலகையில் வைக்கப்பட்டிருந்த ஸ்டிக்கர் சரியாக ஒட்டாமல் தனித்து பிரிந்து காணப்படுகிறது. ஒரு சில இடங்களில் பலகை உடைந்தும் காணப்படுகிறது. இதனால் முகவரிப்பலகை வைக்கப்பட்டும் பலன் இல்லை. சரியான முகவரிப்பலகை இல்லாததால் பொதுமக்களுக்கு முகவரிகளைத் தேடிட சிரமம் ஏற்பட்டுள்ளது. தரமற்ற முகவரிப்பலகைகளின் நிலையைப்பற்றி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டும் இன்று வரை நடவடிக்கை மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மேற்கண்ட முகவரிப்பலகை பழுது குறித்து விவரங்கள் கேட்கப்பட்டதில், அனைத்து பலகைகளும் பழுது பார்க்கப்பட்டுவிட்டது என தவறான தகவல் அளித்துள்ளனர்.

எனவே வேலூர் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் முகவரிப்பலகையை தரமானதாகவும், புதிதாகவும் வைத்திடவும், முகவரிப்பலகை வைப்பதில் முறைகேடு செய்துள்ள மாநகராட்சி செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) வேலூர் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் 20.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

"வேலூர் மாநகராட்சியில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் வேலூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் முகவரிப்பலகைகள் (Signage Boards) ரூபாய் 5.57 கோடி மதிப்பீட்டில் வைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப ரீதியில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாருக்கு மாமன்ற தீர்மான நாள் 31.08.2020ன்படி ஒப்பந்தம் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன. மேற்கண்ட 60 வார்டுகளில் வைக்கப்பட்டிருந்த ஒரு சில முகவரி பலகைகளில் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் மோதியதால் பழுது ஏற்பட்டும், ஒரு சில இடங்களில் சமூக விரோதிகளின் செயல்களினாலும் சேதப்பட்டிருந்தது. இவ்வாறு சேதப்பட்டிருந்த பலகைகள் அவ்வப்போது சரி

செய்யப்பட்டு மீண்டும் அவை வைக்கப்பட்டுள்ளன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பாதாள சாக்கடைத் திட்டம் போன்றவற்றை செயல்படுத்திட ஒரு சில இடங்களில் பள்ளம் தோண்டப்படுகிறது. அத்தகைய இடங்களில் மேற்கண்ட பலகைகள் தற்காலிகமாக கழற்றி வைக்கப்பட்டுள்ளன. பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் முடிந்தவுடன், அவை மீண்டும் வைக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக பெறப்பட்ட L1, L2 –ன் விவரங்களையும், மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களையும் இம்முறைமன்றத்தில் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், இம்முறைமன்றத்தில் என்னால் அளிக்கப்படும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் 19.12.2022 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்கு மூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 19.12.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் Implementation of Signage Boards in ABD area of Vellore Smart City limited பணிக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.57 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி ஆகியவை முறைப்படி பெறப்பட்டு மேற்படி பணிக்கு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு (As per Transperancy Act) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலித்து ஏற்பதற்கு ஏதுவாக மாமன்றத்திற்கு உரிய பொருள் வைக்கப்பட்டு உரிய பரிசீலனைக்கு பின்னர் மாமன்றம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர் J.K. Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க முடிவு செய்து அதன்படி இதுகுறித்து முடிவு செய்திட 15th Board Meeting Minutes நாள். 28.01.2020 அன்று கூட்டப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாமன்றம் தீர்மானம் எண் 409 நாள் 31.08.2020ல் இதற்கான உரிய ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு இதற்கான பணிகளை மேற்கொள்ளும் ஆணை வழங்கப்பட்டு வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள தெருக்களில் பெயர்களை தெரியப்படுத்தும் Signage Board நிறுவப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

| SIGNAGE BOARD DETAILS | | | | | |
|---|---|---|---|---|---|
| Sl.No. | Board Details | Total No. of qty. | Damaged | Rectified | Un-rectified |
| 1. | Single Arrow | 1493 | 25 | 20 | 5 |
| 2. | Double Arrow | 425 | 10 | 8 | 2 |
| 3. | Cautionary Board | 570 | - | - | - |
| 4. | Delinators | 200 | - | - | - |
| 5. | Center Median Marker | 100 | - | - | - |
| 6. | Road Studds | 3763 | - | - | - |
| 7. | Map Type | 6 | - | - | - |
| | **Total** | **6557** | **35** | **28** | **7** |

இப்பணிகள் நிறைவு பெற்ற போதிலும் 60 வார்டுகளுக்குட்பட்ட ஒரு சில இடங்களில் சமூக விரோதிகளின் செயல்பாட்டினால் Signage Board–கள் சேதமடைந்தும், தவிர ஒரு சில சாலைகளின் அகலம் மிகவும் குறுகிய நிலையில் உள்ளதால் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் போக்குவரத்தின் சமயம் இப்பெயர் பலகைகள் மீது மோதி சேதப்படுத்தப்பட்டதாலும் பழுதடைந்தும், தவிர புதை

வடிகால் இணைப்பு பணிகள் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படும் சமயம் இப்பெயர் பலகைகள் இப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்களின் இயக்கத்தால் ஒரு சில Signage Board அமைப்புகள் பழுதுற்றும் சேதம் அடைந்துள்ளதும் கண்டறியப்பட்டது. இது குறித்து இது போன்ற ஒரு சில புகார்கள் பெறப்பட்டு அப்புகார்கள் அடிப்படையில் பொறியியல் பிரிவு சார்ந்த பணியாளர்கள் மூலம் அந்தந்த மண்டல அலுவலகத்தில் வைக்கப்பட்டு பணிகள் முடிவடைந்தவுடன் இப்பெயர் பலகைகள் மீண்டும் அதே இடத்தில் சரி செய்து வைக்க நடவடிக்கைகள் உடனுக்கு உடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தவிர சம்மந்தப்பட்ட வார்டுகளில் பொறியியல் பிரிவு சார்ந்த பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் அலுவலக ஆய்வின்போது மேற்படி பெயர் பலகையை சரிசெய்யப்பட்டதின் புகைப்படம் மற்றும் 60 வார்டுகளில் Signage Board அமைக்கப்பட்டுள்ள விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற சிறு சிறு பாதிப்புகளுடன் உள்ள பெயர் பலகைகள் அடையாளம் காணப்பட்டு அவ்வப்போது நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

வேலூர் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் அமைக்கப்பட்டுள்ள முகவரி பலகை தரமற்றதாகவும், பலகையில் வைக்கப்பட்டிருந்த ஸ்டிக்கர் சரியாக ஒட்டாமல் தனித்து பிரிந்து காணப்படுகிறது. ஒரு சில இடங்களில் பலகை உடைந்தும் காணப்படுகிறது. இதனால் முகவரிப்பலகை வைக்கப்பட்டும் பலன் இல்லை. சரியான முகவரிப்பலகை இல்லாததால் பொதுமக்களுக்கு முகவரிகளைத் தேடிட சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே வேலூர் மாநகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் முகவரிப்பலகையை தரமானதாகவும், புதிதாகவும் வைத்திடவும், முகவரிப்பலகை வைப்பதில் முறைகேடு செய்துள்ள மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்க மனுதாரர் இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

வேலூர் மாநகராட்சியில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் வேலூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் முகவரிப்பலகைகள் (Signage Boards) ரூபாய் 5.57 கோடி மதிப்பீட்டில் வைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப ரீதியில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மான நாள் 31.08.2020ன்படி ஒப்பந்தம் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 60 வார்டுகளில் வைக்கப்பட்டிருந்த ஒரு சில முகவரி பலகைகளில் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் மோதியதால் பழுது ஏற்பட்டும், ஒரு சில இடங்களில் சமூக விரோதிகளின் செயல்களால் சேதப்பட்டிருந்த பலகைகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு மீண்டும் அவை வைக்கப்பட்டுள்ளன. மேலும் பாதாள சாக்கடைத் திட்டம் போன்றவற்றை செயல்படுத்திட ஒரு சில இடங்களில் பள்ளம் தோண்டப்படுகிறது. அத்தகைய இடங்களில் மேற்கண்ட பலகைகள் தற்காலிகமாக கழற்றி வைக்கப்பட்டுள்ளன. பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் முடிந்தவுடன், அவை மீண்டும் வைக்கப்படும் என்பதையும், வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் Implementation of Signage Boards in ABD area of Vellore Smart City limited பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.57 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி ஆகியவை முறைப்படி பெறப்பட்டு மேற்படி பணிக்கு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலித்து ஏற்பதற்கு ஏதுவாக மாமன்றத்திற்கு உரிய பொருள் வைக்கப்பட்டு உரிய பரிசீலனைக்கு பின்னர் மாமன்றம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர் J.K. Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க முடிவு செய்துள்ளது

அதன்படி இதுகுறித்து முடிவு செய்திட 15th Board Meeting நாள். 28.01.2020 அன்று கூட்டப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாமன்றம் தீர்மானம் எண் 409 நாள் 31.08.2020ல் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு இதற்கான பணிகளை மேற்கொள்ளும் ஆணை வழங்கப்பட்டு வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள தெருக்களில் பெயர்களை தெரியபடுத்தும் Signage Board நிறுவப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது என வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதனை உதவி பொறியாளரும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாநகராட்சி சட்டம் (கோவை மாநகராட்சி சட்டப் பிரிவுகள் பின்பற்றப்பட்டு வருகிறது) பிரிவு 237ன் கீழ் மாநகராட்சி பொதுத்தெருக்களைப் பேணிவரவும் செப்பனிடவும் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது வசதிக்குத் தேவையாய் உள்ள அல்லது உகந்தையாய் உள்ள மேம்பாடுகள் அவைகளுக்குச் செய்யப்பட வேண்டும்.

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் வேலூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் முகவரிப்பலகைகள் (signage boards) ரூபாய் 5.57 கோடி மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது. சேதப்படுத்தப்பட்டிருந்த பலகைகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு மீண்டும் அவை ஒரு சில இடங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தினால் முகவரி பலகைகள் தற்காலிகமாக கழற்றி வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பணிகள் முடிந்தவுடன் அவை மீண்டும் வைக்கப்படும் என உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் முகவரிப்பலகை அமைப்பதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக குறிப்பிட்ட நிலையில் இப்பொருள் தொடர்பாக ஒரு சிறப்புக்குழுவினை அமைக்க வேண்டும். அக்குழுவில் வேலூர் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் தவிர்த்து தலைமையிடத்தில் பணிபுரியும் செயற்பொறியாளர் நிலையில் தலைமையாகக்கொண்டு ஒரு குழுவினை அமைத்து வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ், " Implementation of signage board in ABD area of Vellore Smart City Limited என்ற திட்டத்தின்படி ஒப்பந்தத்தில் உள்ளபடி எல்லா வார்டுகளிலும் முறையாக முகவரிப்பலகை அமைக்கப்பட்டுள்ளனவா எனவும் சேதமடைந்த முகவரி பலகைகள் மற்றும் தற்போது சீரமைக்கப்பட்ட முகவரி பலகைகள் மற்றும், மறுசீரமைக்கப்பட வேண்டிய முகவரிப்பலகைகள் போன்றவற்றை, தலஆய்வு செய்தும், ஒப்பந்த காலத்தில் ஒப்பந்த பணிகள் முடிவடைந்த பின்னர், பராமரிப்பு காலத்திலேயே (Maintenance period) மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா அல்லது பொது நிதியிலிருந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது குறித்து மற்றும் இத்திட்டம் சம்பந்தமான அனைத்து கோப்புகளையும் ஆய்வு செய்து, குழுவானது நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிக்கை அளிக்க உத்தரவிடப்படுகிறது. அந்த அறிக்கையில் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டால் அதனை அந்த ஒப்பந்ததாரரைக்கொண்டு சரி செய்திடவும் மற்றும் அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் இப்பொருள் தொடர்பான அனைத்து கோப்புகளையும் மற்றும் வழங்கப்பட்ட பட்டியல் தொகைகள் அனைத்தையும் தணிக்கை செய்யுமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

மேலும் 25% பெயர் பலகைகளையும் நேரில் தணிக்கை செய்து சரி வர பணிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதையும் உறுதி செய்யவும், ஒப்பந்த காலத்துக்குள் சேதாரானமானவைகளை சரி செய்யவும் இழப்புகளை ஈடு செய்யவும் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்தும், மாநகராட்சி நிதி விரயமாகாமல் இருப்பதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது.

The Director, Local Fund Audit is directed to verify the tender records and work orders in the matter apart from constituting a committee to inspect and

verify the erection of Boards in good condition as per the agreement terms in the work orders. Damages and substandard execution should be calculated and the agency which undertook the tender works should be made accountable before the stipulated period expires. The DMA is instructed to ensure compliance with the orders of the Forum as early as possible as the work has been executed at a cost of more than Rs. 5 Crores under the Smart City banner programme.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R.காதர்,
18/A, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு,
இக்ரா பள்ளி அருகில்,
வேலூர் – 632 001.

2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
571, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

02/01/23
செயலாளர்